# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

9

19-ம் நூற்றாண்டின் கடைசி இரண்டு தசாப்த காலத்தில், பௌத்த மறுமலர்ச்சி இயக்கம், அதி தீவிர பௌத்த சிங்கள இனவாத இயக்கமாக வளர்ச்சியுற ஆரம்பித்தது. அதற்கு வர்த்தகத் துறையில் ஏற்பட்ட போட்டியும் ஒரு பிரதான காரணம் ஆகும்.

அக் காலகட்டத்தில் தமிழகத்திலிருந்து தோட்டத் தொழிலாளர்களோடு நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், மற்றும் முஸ்லீம் வியாபாரிகளும் பம்பாயிலிருந்து மார்வாடி வணிகர்களும் அதிகளவுக்கு இலங்கைக்கு வந்திருந்தனர்.

1862-ல் இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் 33 பேர் ஈடுபட்டிருந்தனர். அதில் பி.பி.பெர்ணாண்டோ என்பவரும், ஈ.நன்னித்தம்பி (யாழ்ப்பாணம்) என்பவருமே இலங்கையர்கள். மற்றவர்களில் 27 பேர் ஐரோப்பியர்கள், 4 பேர் பம்பாய் மார்வாடி வணிகர்கள்.

1880-ல் ஏற்றுமதி வர்த்தகத்தில் 54 பேர் ஈடுபட்டனர். அதில் 50 பேர் பிரித்தானியர்கள், 2 பேர் பம்பாயைச் சேர்ந்த பார்சிக்காரர்கள். சார்ள்ஸ் டி. சொய்சா, ஜெரோனிஸ் பிரிஸ் என்ற 2 பேர் சிங்களவர்கள். இலங்கைத் தமிழர்கள் யாருமே இல்லை.

ஆனால் உள்நாட்டு வர்த்தகத்தில் குறிப்பாக அரிசி, புடவை வியாபாரத்தில் 73 நாட்டுக் கோட்டைச் செட்டியார் கொம்பனிகளும், 35 தமிழக முஸ்லீம் வர்த்தகக் கம்பனிகளும் ஈடுபட்டன. இக் காலகட்டத்தில் இலங்கையைச் சேர்ந்த சிங்களக் கொம்பனிகளோ, தமிழ் கொம்பனிகளோ வர்த்தகத்தில் ஈடுபடவில்லை.

1890-ல் புறக்கோட்டை உள்ளூர் இறக்குமதி வர்த்தகத்தில் [illegible] செட்டியார் கொம்பனிகளும், 64 முஸ்லீம் வர்த்தகக் கம்பனிகளும் ஆதிக்கம் செலுத்தின. விரல்விட்டு எண்ணக்கூடிய சிங்களக் கொம்பனிகள் மட்டுமே, அதுவும் பலத்த போராட்டத்துக்கு மத்தியில் இக் காலகட்டத்தில் உருவாக முடிந்தது. இதைவிட இக் கால்கட்டத்தில் குஜராத்தைச் சேர்ந்த முஸ்லீம் வர்த்தகர்களான போரா, கோஷா, மேமன் போன்ற கொம்பனிகள் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் பங்கெடுத்து, பிரித்தானியர்களுடைய கூட்டுப் பங்குதாரர்களாகவும் ஆகிக்கொண்டார்கள்.

இவ்வாறு வர்த்தகத்தில் சிங்களவர்கள் அல்லாத அந்நியர்கள், ஆதிக்கம் செலுத்துவது, பௌத்த சிங்கள இனவாதிகளுக்கு ஆத்திரமூட்டியது. "மண்ணின் மைந்தர்கள் பசியால் வாட; மாற்றான் வந்து எமது செல்வத்தை கொள்ளையடித்துச் செல்வதா?" என்ற அடிப்படையில் அந்நிய வர்த்தகர்களுக்கு எதிராக பௌத்த சிங்கள இனவாதக் கருத்துக்களைப் பரப்பினர்.

20-ம் நூற்றாண்டு பிறந்த போது 'அந்நிய வர்த்தகர்கள் மண்ணின் மைந்தர்களுக்கு எதிரிகள்' என்ற கருத்து மிகச் சக்தி வாய்ந்த பிரச்சாரமாக முன்னெடுக்கப்பட்டது.

அக் காலத்தில் வெளிவந்த சிங்களப் பத்திரிகைகளில் துட்டகாமினி, மகாபராக்கிரமபாகு, சாபுமல் குமரய போன்ற சிங்கள மன்னர்கள் அந்நியர்களையும், அவர்களது படைகளையும் வெற்றி கொண்ட வீரதீரக் கதைகளையும், ஆரிய சிங்கள இனத்தின் பெருமைகளையும், பல்வேறு சிங்கள எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், நாடகாசிரியர்கள், பௌத்த பிக்குகள் எல்லாம் எழுதி, சிங்கள பௌத்தர்கள் அந்நியர் கடைகளைப் பகிஸ்கரிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.



அநகாரிக தர்மபாலா, வெளிநாட்டு முதலாளிகள் எப்படி சிங்களவர்களை சுரண்டுகிறார்கள் என்பதை சித்தரித்து வெளியிட்ட கருத்துப் படம்.

அவர்களில் முக்கியமானவர் அநகாரிக தர்மபாலா. அவருடைய ஆரியப் பார்வையில் ஆரிய இனக் குழுவைச் சேர்ந்த மார்வாடி வணிகர்களைவிட, திராவிட இனத்தைச் சேர்ந்த நாட்டுக்கோட்டை செட்டிமார்களும், தென்னிந்திய முஸ்லீம் வணிகர்களுமே, அதிக ஆபத்தானவர்களாகத் தெரிந்தார்கள். தென்னிந்திய வணிகர்களை அவர் 'தென்னிந்திய தெருப் பொறுக்கிகள்' என்று அடையாளமிட்டு அழைத்து வந்தார்.

1900-ம் ஆண்டு அவர் எழுதிய கட்டுரை ஒன்றில் "நாட்டின் செல்வ வளத்தை அந்நியர்கள் எடுத்துச் செல்லும் போது எமது மண்ணின் மைந்தர்களுக்கு போக்கிடம் எங்கே? இந்த நாட்டில் வந்து குடியேறியோர் திரும்பிச் செல்வதற்கு அவர்களுக்கு நாடு உண்டு. ஆனால் சிங்களவர்கள் செல்வதற்கு எந்த நாடும் இல்லை. அந்நியர்கள் குதூகலிக்கும்போது மண்ணின் மைந்தர்கள் இழப்புக்கு ஆளாவது என்ன நியாயம்? இங்கிலாந்துக்கு இரவலர் வருவதை தடுப்பதற்கு அந்நியர் தடைச்சட்டம் ஒன்று அந்த நாட்டில் உள்ளது. ஆனால் உதவியற்ற அப்பாவிக் கிராமவாசி அவனது மூதாதையரது செல்வத்தைத் திருடும் அந்நிய மோசடியாளர்களுக்கு இரையாகின்றான் என்று எழுதினார்.

20-ம் நூற்றாண்டின் முதல் தசாப்த காலத்தில் இந்த அந்நிய வியாபாரிகளுக்கு எதிரான பௌத்த, சிங்கள இனவாதிகளின் பிரச்சாரப் போர், அதிகளவுக்கு முஸ்லீம்களுக்கு எதிரானதாக கூர்மையடைந்துள்ளது. தமிழகத்து நாட்டுக்கோட்டை செட்டியார்மார்கள் தங்களுடைய வியாபார எல்லையை கொழும்புடன் குறிப்பாக புறக்கோட்டையுடன், மட்டுப்படுத்திவிட முஸ்லீம் வியாபாரிகளே அதிகளவுக்கு தென் பகுதி, நகரங்கள், கிராமங்கள் தோறும், சிறு வியாபாரத்திலிருந்து மொத்த வியாபாரம் வரை தமது நடவடிக்கைகளை விஸ்தரித்திருந்தனர்.

இதனால் தென் பகுதிக் கிராமங்கள், நகரங்களில் சிறு வர்த்தகத்தில் ஈடுபட்ட சிங்கள வர்த்தகர்கள், முஸ்லீம் வர்த்தகர்களுடனேயே நேரடியாக போட்டி போடவேண்டியிருந்தது.

அக் காலத்திலிருந்த சிங்களத் தினசரிகளான லக்மின், தின்மின என்பனவும், பியதாச சிறீசேனவை ஆசிரியராகக் கொண்ட 'சிங்கள சாதி' என்ற பத்திரிகையும் அநகாரிக தர்மபாலாவின் 'சிங்கள பௌத்தய' என்ற பத்திரிகையும், முஸ்லீம் மக்களுக்கு எதிரான தீவிர இனவாதக் கருத்துக்களைக் கொண்டிருந்த கட்டுரைகள், கதைகள், கவிதைகள் என்பனவற்றைப் பிரசுரித்து வந்தன.

## 1915-இல் ஏற்பட்ட சிங்கள முஸ்லிம் இனக்கலவரம்

இத்தகைய பின்னணியில் 1915-ம் ஆண்டு கண்டி, கம்பளை பிரதேசத்தில் புத்த பெரஹரா ஊர்வலம் ஒன்று தமது பள்ளிவாசல் முன்பாக ஆட்டம் பாட்டம், மேளதாளத்துடன் போவதற்கு முஸ்லீம்கள் அனுமதிக்க மறுத்ததைத் தொடர்ந்து சிங்களவர்களுக்கும் முஸ்லீம்களுக்குமான முறுகல் நிலை உச்சக்கட்டத்தை அடைந்தது.

பௌத்த சிங்கள இனவாதிகளுக்கு தங்களுடைய நாட்டில், அதுவும் தங்களுடைய முன்னோர்களின் பூர்வீக மண்ணில் 'பூமி புத்திரர்கள்' அல்லாத முஸ்லீம்கள், பௌத்த பெரஹரா ஊர்வலத்தைத் தடுத்தது சகித்துக் கொள்ள முடியாத மான அவமானப் பிரச்சினையாக இருந்தது.

கண்டிய ஒப்பந்தம் தமக்கு வழங்கிய உரிமைகளின்படியே தாம் அந்த ஊர்வலத்தை நடத்தியதாகவும், அதை முஸ்லீம்கள் தடுத்தது, சட்டவிரோதமானது என்று, அவர்கள் கண்டிய மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். முஸ்லீம்கள் இவர்களது, பேராரவாரத்துடன் கூடிய ஊர்வலம் தமது மசூதியின் புனிதத் தன்மைக்கு கேடு விளைவிக்கும் நோக்கத்தைக் கொண்டது என்பதாலேயே அதைத் தடுத்ததாக எதிர்வாதம் செய்தனர்.

வழக்கை விசாரித்த சிங்கள நீதிபதியான கலாநிதி போல் ஈ.பிரிஸ் சிங்கள பௌத்தர்களின் கோரிக்கையை சரியானதெனக் கூறித் தீர்ப்பளித்தார்.

ஆனால் முஸ்லீம்கள் அதை ஏற்றுக்கொள்ளாது உயர்நீதிமன்றம் சென்றனர். இரண்டு ஆங்கில நீதிபதிகளைக் கொண்ட அந் நீதிமன்றம் முஸ்லீம்களின் தரப்பிலேயே நியாயம் உள்ளதாகக் கூறி, சிங்கவர்களைக் கண்டித்துத் தீர்ப்பளித்தது.

அதைத் தொடர்ந்து தென் பகுதியெங்கும் சிங்கள - முஸ்லீம் கலவரங்கள் ஏற்பட்டன. முஸ்லீம்களின் கடைகளும், வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன. பிரித்தானியக் காலனிய அரசு உடனடியாக இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்து இந்திய, சீக்கியத் துருப்புக்களைப் பயன்படுத்தி இரு தரப்பிலும் பல [illegible] ரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

முஸ்லீம்களுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்ட சிங்களப் பத்திரிகைகள் தடை செய்யப்பட்டன. அதில் அநகாரிக தர்மபாலாவின் 'சிங்கள பௌத்தய'வும் அடக்கம்.

பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் மற்றும் மது ஒழிப்பு இயக்கத்தைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டனர். புறக்கோட்டையிலிருந்த பிரபல சிங்கள வியாபாரியான டி.டி.பிரிஸ் என்பவர், கலவரத்தின் சூத்திரதாரி எனக் கருதப்பட்டு, விசாரணையின் பின் சுட்டுக் கொல்லப்பட்டார். எட்மண்ட் கேவவிதாரண, என்.எஸ்.பெர்னாண்டோ விஜயசேகரா ஆகிய சிங்கள வியாபாரிகளுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டதாயினும் பின்னர் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

இவ்வாறு, பௌத்த சிங்கள மறுமலர்ச்சியாளர்களும் இனவாதிகளும் சிறையில் அடைக்கப்பட்டும், சுட்டுக்கொல்லப்பட்டும் நெருக்கடிகளைச் சந்தித்த நேரத்தில் அவர்களுக்காக நியாயம் கேட்பதற்காக வாதாடுவதற்காக யாழ்ப்பாணத்து கனவானான சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள், 1-ம் உலக யுத்தம் உச்சக் கட்டத்தில் இருந்த அந்த நேரத்தில், நீர்மூழ்கிகள் நிறைந்த கடலில் ஆபத்தைப் பொருட்படுத்தாது, கப்பலில் லண்டனுக்குப் பயணமானார்.

- நக்கீரன்